**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு.**

முன்னிலை. திரு.S.R.பாபு B.A., B.L.

நீதித்துறை நடுவர் எண்.3, ஈரோடு.

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு 828/2025**

**CNR No-TNED 04-006348-2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசு தரப்பில் காவல் உதவி ஆய்வாளர்,<br>சித்தோடு காவல் நிலையம்.<br>குற்ற எண்.196/2023 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | அஜித்குமார், வயது 21/2025,<br>த/பெ.வத்தன்,<br>கன்னிமார் காடு, நல்லகவுண்டன்பாளையம்,<br>சித்தோடு, ஈரோடு. |
| வனையப்பட்ட குற்றங்கள் | : | U/s. 380 of IPC |
| குற்றம் நிகழ்ந்த நாள் | : | 15.05.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 15.05.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | : | 15.05.2023 – 21.12.2023 (220 நாட்கள்) & 06.05.2026 – முதல் தற்போது வரை (69 நாட்கள்) |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 21.12.2023, எதிரி தற்போது நீதிமன்றக் காவலில் உள்ளார். |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 04.09.2025 |
| குவிமுச பிரிவு 240(1)-இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 06.02.2026 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | : | 20.05.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | : | 17.06.2026 |
| குவிமுச.பிரிவு.311-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | : | Nil |
| குவிமுச.பிரிவு.313(1)(ஆ)-இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 23.06.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | : | இல்லை |



S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.14 16:28:15 +0530

| | | |
|---|---|---|
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | : | இல்லை |
| வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்ட நாள் | : | 14.07.2026 |
| தீர்ப்பு பகரப்பட்ட நாள் | : | 14.07.2026 |
| தீர்மானம் | : | எதிரி இதச பிரிவு 380-ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. |
| முடிவு | : | இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட 380 இதச சட்டப்பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து,<br>எதிரிக்கு BNS பிரிவு 380-ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருடம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும், அபராதம் ரூ.500 விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஒரு மாத காலம் சிறைத்தண்டனை விதித்தும் குவிமுச 248(2) பிரிவின் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>மேலும், எதிரி கடந்த 15.05.2023 முதல் 21.12.2023 வரையிலான (220 நாட்கள்) மற்றும் 06.05.2026 முதல் தற்போது வரையிலான (69 நாட்கள்) ஆக மொத்தம் 289 நாட்கள் சிறையில் இருந்துள்ள நிலையில், அவர் சிறையிலிருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து குவிமுச பிரிவு 428-ன் கீழ் கழித்து உத்தரவிடப்படுகிறது.<br>எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் PR No. 90/2023-ல் தாக்கல்செய்யப்பட்டுள்ள VIVO செல்போனை அதன் உரிமையாளர் தகுந்த மனு தாக்கல் செய்து மேல்முறையீட்டுக் காலத்திற்குள் பெற்றக்கொள்ளவும், தவறும் பட்சத்தில் அரசுக்கு ஆதாயமாக்கவும் உத்தரவிடப்படுகிறது.<br>மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைபடுத்தவும் உத்தரவிடப்படுகிறது. |



S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.07.14 16:28:21 +0530

இந்த வழக்கு 04.09.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திருமதி.J.கவிதா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**<u>தீ ர் ப் பு ரை</u>**

**<u>சித்தோடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்:</u>**

1. கடந்த 15.05.2023–ம் தேதி, 14.30 மணியளவில் சித்தோடு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட எலவமலை அஞ்சல் கிரேஸ் ஸ்கூல் அருகில் ANA நகரிலுள்ள முருகேசன் என்பவரின் வீட்டினுள் முன்புற போர்ட்டிகோவில் உள்ள பிளக்கில் சார்ஜ் போட்டு வைத்து இருந்த கோல்ட் கலர் VIVO செல்போன் மதிப்பு ரூ.10,000/– உள்ளதை எதிரி அஜித்குமார் தனக்கு சுயலாயம் கருதியும், வாதிக்கு நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் திருடிச் சென்றுள்ள குற்றத்திற்காக எதிரி மீது சித்தோடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் இதச பிரிவு 380–ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி குற்ற அறிக்கையை நன்கு பரிசீலித்து எதிரி மீது இதச பிரிவு 380–ன் படி வழக்கினை கோப்புக்கு எடுத்துக் கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குவிமுச பிரிவு 207–ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது இதச பிரிவு 380–ன் படியான குற்றச்சாட்டுக்கான முகாந்திரம் இருப்பது பற்றி குவிமுச பிரிவு 240–ன் கீழ் எதிரியிடம் இதச பிரிவு 380–ன் கீழான குற்றச்சாட்டு வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவிய


S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.14 16:28:26 +0530

போது எதிரி குற்றத்தினை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சிகள் 3 5, 6 ஆகியோர்களை விசாரிக்காமல் அரசு தரப்பில் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சியங்களின் வாயிலாக புலப்படும் வாதத்தின் சுருக்கம்</u>**

6.1) அ.சா.1 திரு.முருகேசன் தனது சாட்சியத்தில், கடந்த 15.05.2023 ஆம் தேதி மதியம் 01.00 மணிக்கு சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்து, செல்போனை தன் வீட்டு போர்டிகோவில் உள்ள ஜன்னல் திட்டின் மீது தனது கோல்ட் கலர் VIVO செல் போனை சார்ஜ் போட்டுவிட்டு தான் வீட்டினுள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, திடீரென்று யாரோ ஒரு நபர் உள்ளே நுழைந்தது போல் இருந்தது தான் எழுந்து வந்து பார்த்தபோது, என் வீட்டின் மதில் சுவரைத் தாண்டி ஒரு நபர் ஓடினார் என்றும், நான் யாரோ ஓடுகிறார்கள் என்று சத்தம் போட்டேன் என்றும், தான் சார்ஜ் போட்டு இருந்த தன்னுடைய செல்போனையும் காணவில்லை என்றும், பின்பு தானும் தனது பக்கத்து வீட்டுக்காரர் செந்தில் என்பவரும் ஓடிச் சென்று அந்த நபரை பிடித்தோம் என்றும், செல்போனுடன் எதிரியை பிடித்து சித்தோடு காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம் என்றும், தான் சித்தோடு காவல் நிலையத்தில் புகார் (அ.த.சா.ஆ.1) கொடுத்தேன் என்றும், காவல் நிலையத்தில் போலீசார் கோல்ட் கலர் VIVO செல்போனை (அ.த.சா.பொ.1) படிவம் 91—ல் கைப்பற்றினார்கள் என்றும், படிவம் 91—ல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் (அ.த.சா.ஆ.2) தன்னுடையதுதான் என்றும், நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் செல்போன் தன்னுடையதுதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.14 16:28:30 +0530

6.2) அ.சா.2 திரு.செந்தில்குமார் தனது சாட்சியத்தில், கடந்த 15.05.2023 ஆம் தேதி மதியம் சுமார் 02:30 மணி அளவில் தன் வீட்டின் போர்ட்டிகோவில் உட்கார்ந்திருந்தபோது, பக்கத்து வீட்டில் குடியிருக்கும் முருகேசன் சத்தம் போட்டுக்கொண்டே வெளியே ஓடி வந்தார் என்றும், நான் என்னவென்று கேட்டபோது அவருடைய செல்போனை சார்ஜ் போட்டு வைத்திருந்ததாகவும், ஒரு நபர் உள்ளே வந்து திரும்ப செல்வதாக கூறினார் அப்போது ஒரு நபர் ஓடிக்கொண்டிருந்தார் என்றும், பின்னர் தானும் முருகேசனும் அந்த நபரை துரத்தி சென்று பிடித்தோம் என்றும், அந்த நபரின் கையில் முருகேசனின் செல்போன் இருந்தது என்றும், பின்னர் இருவரும் எதிரியை பிடித்து சித்தோடு காவல் நிலையம் கொண்டு சென்று ஒப்படைத்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் செல்போன் (அ.த.சா.பொ.1) முருகேசனின் செல்போன் தான் என்றும், படிவம் 91–ல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.த.சா.ஆ.3) தன்னுடையதுதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 திரு.வேலுச்சாமி, தனது சாட்சியத்தில், பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் (அ.த.சா.ஆ.4) தன்னுடையதுதான் என்றும், கடந்த 05.05.2023 தேதி தானும் தனது நண்பர் கோவிந்தராஜ் என்பவரும் காலிங்கராயன்பாளையம் கிரேஷ் ஸ்கூல் அருகே உள்ள புதிதாக கட்டி வரும் வீட்டில் சென்ட்ரிங் வேலை செய்து கொண்டிருந்தோம் என்றும், அருகில் உள்ள ஒரு வீட்டில் சார்ஜ் போட்டு வைத்திருந்த செல்போனை ஒரு நபர் திருடிக் கொண்டு சென்றதாக அருகில் இருந்தவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 திரு.குகனேஷ்வரன், தனது சாட்சியத்தில், கடந்த 15.05.2023 ம் தேதி மதியம் 16.00 மணிக்கு முருகேசன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் அஜித்குமர் என்பவர் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும், முருகேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று முதல் நிலை காவலர் சந்தோஷ்குமார் முதல் தகவல் அறிக்கையை (அ.த.சா.ஆ.5) பதிவு செய்ததாகவும், பின்னர் வழக்கு கோப்பினை தான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 15.05.2023 ம் தேதி காலை 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வேலுச்சாமி மற்றும்



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.14 16:28:37 +0530

கோவிந்தராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் (அ.த.சா.ஆ.6) மற்றும் மாதிரி வரைபடம் (அ.த.சா.ஆ.7) தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், முருகேசனும், செந்தில் குமாரும் சேர்ந்து அஜித்குமாரையும் அவர் திருடிய செல்போனையும் சித்தோடு காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தனர் என்றும் பின்னர் எதிரி அஜித்குமாரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன் என்றும், வழக்கு சொத்தினை படிவம் 91ல் (அ.த.சா.ஆ.8) கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் என்றும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இதச சட்டப்பிரிவு 380—ன் கீழ் இறுதி அறிக்கையை தயார் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிவடைந்தது.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b)—ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரி அதனை மறுத்தார். எதிரி அவரது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

9. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ 8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சிகள் 3 5, 6 ஆகியோர்களை விசாரிக்காமல் அரசு தரப்பில் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.14 16:28:41 +0530

**<u>விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்</u>:**

10. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

11. இனி இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையானது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

12. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் மூலமாகவும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அரசு தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1–ன் மூலமாகவும் அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

13. மாறாக எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில் வாதியின் செல்போனை எதிரி திருடவில்லை என்றும், திருடிய நபர் செல்போனை போட்டுவிட்டு ஓடிவிட்டார் என்றும், அதனை வாதி எடுத்து நடந்து சென்று கொண்டிருந்த எதிரியைப் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் எனவே எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

14. இவ்வழக்கில் புகார்தாரரான முருகேசன் அ.சா.1 ஆகவும், கண்ணுற்ற சாட்சி அ.சா.2 ஆகவும், பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.3–ம் மற்றும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

15. எதிரி மீதான இதச பிரிவு 380–ன் கீழான குற்றம் குறித்து பரிசீலிக்கும்போது, அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 15.05.2023–ம் தேதி, 14.30 மணியளவில் சித்தோடு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட எலவமலை அஞ்சல் கிரேஸ் ஸ்கூல் அருகில் ANA நகரிலுள்ள முருகேசன் என்பவரின் வீட்டினுள் முன்புற போர்ட்டிகோவில் உள்ள பிளக்கில் சார்ஜ் போட்டு வைத்து இருந்த கோல்ட் கலர் VIVO செல்போன் மதிப்பு



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.14 16:28:45 +0530

ரூ.10,000/– உள்ளதை எதிரி அஜித்குமார் தனக்கு சுயலாயம் கருதியும், வாதிக்கு நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் திருடிச் சென்றுள்ளார் என்பதேயாகும்.

16. எதிரி மீதான BNS பிரிவு 380–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கும் போது, அ.சா.1, அ.சா.2, அ.சா.3 மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஆகியோர்களின் சாட்சியத்தின் மூலம் கடந்த 15.05.2023–ம் தேதி அ.சா.1 க்கு சொந்தமான கோல்ட் கலர் VIVO செல்போன் (அ.த.சா.பொ.1) காணாமல் போயுள்ளதும், எதிரியை அ.சா.2 உடன் சேர்ந்து பிடித்து அ.சா.1 சித்தோடு காவல் நிலையத்தில் ஒப்படைத்து புகார் மனு (அ.த.சா.ஆ.1) கொடுத்துள்ளதும், மேற்படி செல்போன் படிவம் 91–ல் (அ.த.சா.ஆ.8) போலீசார் கைப்பற்றியுள்ளதும், மேற்படி புகார் மனுவின் பேரில் முதல் தகவல் அறிக்கை (அ.த.சா.ஆ.5) பதிவு செய்துள்ளது அ.சா.4–ன் சாட்சியத்தின் மூலமும், பின்னர் காவல் உதவி ஆய்வாளர் குனகேஷ்வரன் அவர்கள் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் (அ.த.சா.ஆ.6) மற்றும் மாதிரி வரைபடம் (அ.த.சா.ஆ.7) தயார் செய்யப்பட்டுள்ளது அ.சா.3–ன் சாட்சியத்தின் மூலமும் தெரியவருகிறது.

17. அ.சா.1–ன் மேற்படி கோல்ட் கலர் VIVO செல்போன் காணாமல் போகியுள்ளதும், எதிரியைப் பிடித்து காவல் நியைத்தில் ஒப்படைத்துள்ளதும் நிரூபணமாகியுள்ள நிலையில், மேற்படி அ.சா.1–ன் செல்போனை எதிரி திருடிச் சென்றாரா என்பது குறித்து பரிசீலிக்கும் போது, அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 15.05.2023 ஆம் தேதி மதியம் 01.00 மணிக்கு சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்து, செல்போனை தன் வீட்டு போர்டிகோவில் உள்ள ஜன்னல் திட்டின் மீது சார்ஜ் போட்டுவிட்டு தான் வீட்டினுள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, திடீரென்று யாரோ ஒரு நபர் உள்ளே நுழைந்தது போல் இருந்தது என்றும், தான் எழுந்து வந்து பார்த்தபோது, தன் வீட்டின் மதில் சுவரைத் தாண்டி ஒரு நபர் ஓடினார் என்றும், தான் யாரோ ஓடுகிறார்கள் என்று சத்தம் போட்டதாகவும், தான் சார்ஜ் போட்டு இருந்த தன்னுடைய செல்போனையும் காணவில்லை என்றும், பின்பு தானும் தனது பக்கத்து வீட்டுக்காரர் செந்தில்குமார்


S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.14 16:28:49 +0530

(அ.சா.2) என்பவரும் ஓடிச் சென்று அந்த நபரை பிடித்ததாகவும் அந்த நபர் எதிரிதான் என்றும், அவரை செல்போனுடன் பிடித்து சித்தோடு காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிறது. மேற்படி அ.சா.1–ன் சாட்சியத்தை ஒற்றியே அ.சா.2–ம் சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிறது. மேலும், அ.சா.2–ன் சாட்சியத்தை பரிசீலிக்கும் போது, அ.சா.1–ன் சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாகவே அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிறது.

18. மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2–ன் சாட்சியத்தின் மூலம் கடந்த 15.05.2023–ம் தேதியில் சுமார் 14.30 மணியளவில் அ.சா.1–ன் வீட்டின் உள்ளே இருந்த செல்போனை எதிரி திருடிச் சென்றுள்ளதும், அவரை அ.சா.1–ம், அ.சா.2–ம் துரத்தி பிடித்துள்ளதும், எதிரியிடமிருந்து அ.சா.1–ன் செல்போன் கைப்பற்றப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

19. எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி அந்த வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார் என்றும், வாதியின் செல்போனை திருடிய நபர் செல்போனை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார் என்றும், ஆனால் எதிரிதான் செல்போனை திருடியதாக தவறாக நினைத்து எதிரியை பிடித்து காவல் நிலையத்தில் வாதி ஒப்படைத்துவிட்டார் என்றும் வாதிடப்பட்டது. மேற்படி சங்கதி குறித்து பரிசீலிக்கும் போது, எதிரியை அ.சா.1–ம், அ.சா.2–ம் துரத்திச் சென்று பிடித்துள்ளதும், எதிரியிடமிருந்து வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுள்ளதும் நிரூபணமாகியுள்ள நிலையில் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21. இவ்வழக்கின் எதிரி இதச பிரிவு 380–ன் கீழ் குற்றவாளி என முடிவுசெய்யப்பட்டுள்ளதால், அவருக்கு வழங்கப்போகும் தண்டனை குறித்து கேட்டபோது, எதிரி



S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.07.14 16:28:54 +0530

"சிறையில் இருந்த நாட்களை தண்டனை காலமாக வழங்க கேட்டுக்கொள்கிறேன்"

என்று கூறினார். எதிரியின் வயது மற்றும் குடும்ப சூழ்நிலை கருத்தில் கொள்ளப்பட்டது,

22. இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச 380 ஆகிய பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து,

எதிரிக்கு BNS பிரிவு 380-ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருடம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும், அபராதம் ரூ.500 விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஒரு மாத காலம் சிறைத்தண்டனை விதித்தும் குவிமுச 248(2) பிரிவின் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும், எதிரி கடந்த 15.05.2023 முதல் 21.12.2023 வரையிலான (220 நாட்கள்) மற்றும் 06.05.2026 முதல் தற்போது வரையிலான (69 நாட்கள்) ஆக மொத்தம் 289 நாட்கள் சிறையில் இருந்துள்ள நிலையில், அவர் சிறையிலிருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து குவிமுச பிரிவு 428-ன் கீழ் கழித்து உத்தரவிடப்படுகிறது.

23. எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

24. இவ்வழக்கில் PR No. 90/2023-ல் தாக்கல்செய்யப்பட்டுள்ள VIVO செல்போனை அதன் உரிமையாளர் தகுந்த மனு தாக்கல் செய்து மேல்முறையீட்டுக் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளவும், தவறும் பட்சத்தில் அரசுக்கு ஆதாயமாக்கவும் உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைபடுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.14 16:29:05 +0530

அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 14–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.14 16:29:10 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.

| **இணைப்பு :** | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சாட்சிகள் :–** | | |
| **அரசு தரப்பு சாட்சி எண்.** | **பெயர்** | **எவ்வகையான சாட்சி** |
| அ.சா.1 | திரு. முருகேசன் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. செந்தில்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.வேலுச்சாமி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.4 | திரு.குகனேஷ்வரன், உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

| **அரசு தரப்பு சான்றாவணங்கள்.** | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சான்றாவணம் எண்.** | **எவ்வகை ஆவணம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
| அ.த.சா.ஆ.1 | 15.05.2023–ம் தேதியிட்ட புகார் மனு | அ.சா.1 |
| அ.த.சா.ஆ.2 | 15.05.2023–ம் தேதியிட்ட படிவம் 91–ல் உள்ள அ.சா.1 சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.த.சா.ஆ.3 | 15.05.2023–ம் தேதியிட்ட படிவம் 91–ல் உள்ள அ.சா.2 சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.த.சா.ஆ.4 | 15.05.2023–ம் தேதியிட்ட பார்வை மகஜரில் உள்ள அ.சா.3 சாட்சி கையொப்பம் | அ.சா.3 |
| அ.த.சா.ஆ.5 | 15.05.2023–ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.த.சா.ஆ.6 | 15.05.2023–ம் தேதியிட்ட பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.த.சா.ஆ.7 | 15.05.2023–ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.த.சா.ஆ.8 | 15.05.2023–ம் தேதியிட்ட படிவம் 91 | அ.சா.4 |

| **அரசு தரப்பு சான்று பொருள்:–** | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சான்று பொருள் எண்.** | **எவ்வகை சான்று பொருள்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |

| | | |
|---|---|---|
| அ.த.சா.பொ.1 | VIVO செல்போன் | அ.சா.1 |
| **<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u> :–** இல்லை | | |
| **<u>குறிப்பு:–</u>** | | |
| 1) விசாரணை காலத்தில் எதிரி நீதிமன்ற காவலில் இருந்துள்ளார். | | |
| 2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை. | | |
| 3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. | | |

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.14 16:29:18 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.